1983 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது மிகவும் பெரிய கேள்வி. ஆகையினாலே இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் தான் விவரமாகப் பதில் தர இயலும். மின்சாரப் பற்றாக்குறை நமக்குப் பெரிய அதிர்ச்சி வைத்தியம் என்று சொன்னார்கள். அதிர்ச்சிதான் கிடைத்திருக்கிறதே தவிர இன்னும் வைத்தியம் கிடைக்கவில்லை.

மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது குறித்து

நீதிபதி W. S. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அளித்த பரிந்துரை.

* வினா எண் 42—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதிபதி W. S. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் தீர்ப்பின் அடிப்படையில் 124 மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது பற்றி நீதிபதி டபிள்யு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனின் பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கோரி மின்வாரிய ஊழியரான திரு. ராபின்சன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவின் மீது நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அண்மையில் 21—1—8 அன்று இது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது, ஆகையினாலே இதன்மீது மின் வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தற்காலிக ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதில் தமிழ்நாடு மின்சார அணைக்கட்டுத் தொழிலாளர் சங்கமும், தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும் செய்த நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் அந்த வாரியத்தினுடைய ஆணைகளுக்கு முற்றிலும் முரணாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டது என்று தீர்ப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் அந்தப் பதவி உயர்வு பெறத் தவறியவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கிற போது அன்றைய தேதியிலே இருந்து சம்பளம் கிடைப்பதற்கு வாரியம் பரிசீலிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

[1983 ஜனவரி 29

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறைகேடு நடந்திருக்கின்றது என்பதுதான் கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அளித்துள்ள தீர்ப்பு. அதை எதிர்த்துதான் மேல் முறையீடு உயர்நீதி மன்றத்தில் செய்தார்கள். உயர்நீதி மன்றமும் அதைத் தள்ளுபடி செய்துவிட்டது. ஆகையினாலே இந்த முறைகேட்டை நிவர்த்திப்போம். ஆனால் அந்த நாளிலிருந்து சம்பளம் கொடுப்பது என்பது மின் வாரியத்தைப்பற்றி நன்றாக தெரிந்துள்ள நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நிச்சயமாக பரிந்துரைக்கமாட்டார் என்று நம்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தினக்கூலிகளை நிரந்தரமாக்குவதற்காக வாரியம் 4-1-1972லே பிறப்பித்த ஆணையின்படி தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 9 ஆயிரம் பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலே நடந்த தவறைப்போல இந்த 9 ஆயிரம் பேர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதிலே, மற்ற பகுதிகளிலே ஏற்பட்டிருக்கிறதா என்பதை வாரியம் விரிவாக ஆய்ந்து முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்கள் இத்தகைய உத்தரவின் மூலம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் வளைந்த செங்கோலை நிமிர்த்துவதற்கு மின்வாரியம் வழி செய்யும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இந்தத் தவறுக்குக் காரணமான அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த அதிகாரிகள் எல்லாம் இன்னும் மின்வாரியத்தில் பணியாற்றுகிறார்களா அல்லது ஓய்வு பெற்றுவிட்டார்களா என்பது தெரியவில்லை. இருந்தாலும் அது பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்த மேல் ஆளியாறு மின் திட்டத்தில் தொழிலாளர்களை மின்திட்டம் முடிந்த உடனே வீட்டுக்கு அனுப்பும்படியான காரியத்தை அந்தக் காலத்திலே இருந்த அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்டி, எந்தவிதமான ரிட்ரென்ச்மெண்டும் இல்லாமல் வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டு, தற்போது தமிழகம் முழுவதும் அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது நல்ல ஏற்பாடு. அதன்படி கொடுத்திருக்கும்படியான லிஸ்ட்டிலே தவறு செய்திருப்பது தமிழ்நாடு மின்சார அணைக்கட்டுத்

தொழிலாளர் சங்கம் அல்ல. அது அதில் நியாயம் பண்ண வேண்டும் என்றுதான் கேட்டது. திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டது சரியல்ல. ஆகவே அந்தத், தொழிலாளர்கள் இன்றைக்கும் வேலை இல்லாமல்—மின்வாரியத் தலைவரின் தவறினாலே—இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கத்திற்கு நன்றி.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மின்வாரியம் செய்து இருக்கும்படிவான தவறுக்கு, அந்த தவறைத் திருத்தும் பணியைச் செய்யாமல் இருப்பதை அரசு முன் வந்து செயல்படுத்துமா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர் ஒரு சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அதற்கு அவர் விளக்கம் சொன்னார். ஆகையினாலே மன்றத்திற்கு வேண்டிய தகவல் கிடைத்து விட்டது என்பதால்தான் தன்னிலை விளக்கத்திற்கு நன்றி என்று சொன்னேனே தவிர வேறல்ல. குறைபாடுகள் இருந்தால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல அவை நிவர்த்தி செய்யப்படும்.

தூத்துக்குடியிலுள்ள டான்சி நிறுவனம்.

* வினா எண் 43—திரு. மு. அப்பாதுரை, திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்—மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள டான்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு?
(இ) அங்கு எவ்வளவு பேர் பணிபுரிகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தூத்துக்குடி டான்சி நிறுவனத்தில்—

(அ) உற்பத்தி செய்யப்	1979-80—ல் ரூ. 18.33 இலட்சம்
பட்ட பொருள்களின் மதிப்பு	1980–81—ல் ரூ. 20.26 இலட்சம்
	1981-82—ல் ரூ. 26.57 இலட்சம்